R 5668 (Page 115)

# எல்லா கிருபைகளின் மொத்தம்
# The sum of all Grace

*"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது." 1 கொரிந்தியர் 13:13*

புதிய சுபாவத்திற்கு ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு அப்பொழுது அளிக்கப்பட்ட பல்வேறு ஆவியின் அற்புத வரங்களைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் கூறிக் கொண்டிருக்கிறார். அந்த காலக்கட்டத்தில் இந்த விசேஷித்த வரங்களில் யாராவது குறைவுபட்டிருந்தால், அவர் இன்னும் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராகவில்லை என்று அனைத்து விசுவாசிகளுக்கும் வெளியரங்கமாகும். இந்த தெய்வீக வரங்கள் ஆதிகால சபை ஆவியில் வளருவதற்கு உதவிகரமாயிருந்தன. அந்நாட்களிலே வேதாகமம் இல்லை. அப்படி அதை பெற்றிருந்தாலும் மிகச் சிலரே அதை படித்திருப்பார்கள். எனவே விசேஷித்த உதவி அவர்களுக்கு தேவையாயிருந்தது. அதன் பிறகு அவை சபைக்கு தேவைப்படவில்லை. பிறகு அவைகள் நீக்கப்பட்டன.

அப்போஸ்தலர் கொரிந்து சபைக்கு எழுதிய இந்த நிருபத்தில் இந்த பல்வேறு வரங்களைக் குறித்து எழுதிய பிறகு"இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்"என்று கூறுகிறார். பிறகு அன்பு என்னும் ஆவியின் கனியின் மிகச் சிறந்த மேன்மையைப் பற்றி குறிப்பிடுகிறார். பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் யாராயிருந்தாலும், இந்த கனியில் கொஞ்ச அளவாவது பெற்றிருக்க வேண்டும். அது சிறு பூ அளவில் மொட்டாகவோ, கொஞ்சம் பழமாகவோ, முழுவளர்ச்சியடைந்த பழமாகவோ அல்லது பழுத்த பழமாகவோ இருக்கலாம். இருதயத்தை பார்க்கிற நமது பிதாவாகிய தேவன், இருதயததில் அவரது பரிசுத்த ஆவி மாம்சத்தை கட்டுப்படுத்தவும். சிந்தை, வார்த்தைகள், செயல்கள் ஆகியவற்றை வழிநடத்தவும் எப்படி நாடுகிறது என்பதையும் அறிவார். நாம் ஒருவருக்கொருவர் நமது இருதயங்களை நியாயந்தீர்க்க இயலாதவர்களாக இருக்கிறோம். அப்போஸ்தலர், தன்னைத்தானே சரியாக நியாயந்தீர்க்க இயலவில்லை என்றும் ஆனால் நியாயத்தீர்ப்பை தேவனிடம் விட்டுவிட்டதாகவும் கூறினார். தனது இருதயம் உண்மையுள்ளதாய் இருக்கிறது என்பதையும், தேவன் அவர் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்படியிருக்க தான் முயன்றதையும் அவர் அறிந்தவராக இருந்தார். அவர் செய்யாதிருக்க வேண்டியதை செய்ய தனது இயலாமையை அவர் உணர்ந்திருந்தாலும். அவரது இருதயத்தின் உண்மைத் தன்மையை ஆண்டவர் ஏற்றுக் கொள்வார் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகையால் அவரால் முடிந்ததை செய்துவிட்டு, மற்றவைகளை தேவனிடம் விட்டுவிடுவார்.

தேவனிடத்தில் நாம் வைத்திருக்கிறது விசுவாசமும் நம்பிக்கையும் அன்பு என்னும் கனியை அதன் எல்லா மாறுபட்ட அழகான அம்சங்களிலும் ஆர்வமுடன் அபிவிருத்தி செய்ய நம்மை வழி நடத்தும். தயவு என்பது அன்பின் ஒரு பாகமாக இருக்கிறது; சாந்தம் என்பது அன்பின் ஒரு பாகமாக இருக்கிறது; அதே போல் மனத்தாழ்மையும் சகோதர அன்பும் பாகமாக இருக்கிறது. ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையினிடத்திலும் இருக்கும் பிரச்னை, நான் எவ்வளவு உயரமாக உடல் கட்டோடு இருக்கிறேன் என்பதல்ல; பார்க்க அழகாக இருக்கிறேனா அல்லது நன்கு படித்திருக்கிறேனா அல்லது தசையோடு நன்கு இணைக்கப்பெற்றிருக்கிறேனா என்பதல்ல; எத்தனை அல்லது எத்தனை நல்ல பிரசங்கங்களை நான் செய்திருக்கிறேன் என்பதல்ல; அல்லது எத்தனை பேரை நான் சத்திய அறிவுக்குள் கொண்டு வந்திருக்கிறேன் என்பதல்ல; ஆனால் மிக முக்கியமான கேள்வி, அன்பின் குணலட்சணங்களில் நான் எவ்வளவு அபிவிருத்தி அடைந்திருக்கிறேன் என்பதாகும். கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக நான் எந்த அளவுக்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறேன் என்பதாகும்.

## அன்புதான் அடிப்படையானது

அன்பு என்கிற இந்த குணம் ஏன் தேவனுடைய வசனத்தில் அவ்வளவு முக்கியமானதாக ஆக்கப்பட்டிருக்கிறது? நாம் பதிலளிக்கிறோம், இதுதான் முதலாவது காரியம், மிகவும் முக்கியமான காரியம், அடிப்படையானது. இது தேவனுடைய பிரமாணங்களை நிறைவு செய்கிறது. மேலும் இந்த யுகத்தில் தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு உத்திரவிடப்பட்டிருக்கிற ப-யின் அன்பு, பூரண பிரமாணத்தின் தேவைகளுக்கு மேலாக செல்கிறது. ஆனால் ஏன் அன்பு முதலாவதாக வைக்கப்படுகிறது? தேவன் தன்னிச்சையாக அதை வைத்ததினால் அல்ல, தமது அதிகாரத்தில் அதை அப்பியாசப்படுத்தினதினாலோ அல்லது அது முதலாவதாக இருக்க வேண்டும் என்று அறிவித்ததினாலோ அல்ல. காரணம் என்னவெனில், வேறு எந்த குணத்தைக் காட்டிலும் இது காண்பிக்கப்படுகிற அனைவருக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதத்தையும் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கிறதோடு, இது அவ்வளவு வசீகரமானதாகவும், அவ்வளவு இனிமையானதாகவும் அழகானதாகவும் இருக்கிறது. இது தேவனுடைய குணலட்சணத்தின் நிஜமான சாரம்சமாக இருக்கிறது. "**தேவன் அன்பாக இருக்கிறார்**!" இந்த குணலட்சணம் தேவனுடைய தனித்தன்மையை குறிப்பிடுகிறது. தேவன் சர்வ நீதியும் சர்வ வல்லமையும்,

உடையவராயிருக்கும் போது, தேவன் நீதியாயிருக்கிறார் என்றோ, தேவன் வல்லமையுள்ளவராயிருக்கிறார் என்றோ நாம் கூறாமல், தேவன் அன்பாயிருக்கிறார் என்றே கூறுகிறோம். அன்பின் உத்திரவின்படியும், அங்கீகாரத்தின்படியும், தேவன் தமது மகா வல்லமையை பயன்படுத்துகிறார். தமது அன்பின மகிமையான பண்பிற்கு இசைவாகவே தேவன் தமது நீதியை பயன்படுத்துகிறார். அவரது எல்லா செயல்களுக்கும் அன்பே முக்கிய உற்பத்திஸ்தானமாயிருக்கிறது.

தேவனைப் போன்று இருப்பவர்கள். அன்புடையவர்களாயிருக்க வேண்டும்; அவர்களது வாழ்க்கையிலும் குணலட்சணத்திலும் அன்பே ஆதிக்கம் செலுத்த வேண்டும். அன்பும் நீதியும் பிரிக்க முடியாதது. அன்பு முடிவற்றதாய் நித்தியமாய் தொடர வேண்டியதாயிருக்கிறது. இந்த கிருபையின் குணலட்சணத்திற்கு உற்சாகமாக தன்னுள் கொண்டிருப்பவர்கள் மட்டுமே நித்தியமாய் வாழ்வார்கள். எனவே ஒவ்வொரு வாழ்க்கையிலும் இதன் அபிவிருத்தியின் அதிமுக்கியத்துவத்தை நாம் காண்கிறோம்.

---

See more Books & Articles at www.foodfornewcreature.com